22nd August 1961]

SRI A. A. RASHEED : What are the new working hours that are under consideration by the Government? Will the Government consider changing the working hours from 8 a.m. to 2 p.m. at least during the summer season?

THE HON. SRI C. SUBRAMANIAM : The whole matter is under consideration. Therefore, I am unable to give an immediate answer. As pointed out by Sri N. K. Palanisami, there is opposition from the N.G.O's Association in regard to this matter. In these matters, we will have to carry the persons concerned along with us. There is no use of making a change which is likely to be opposed by anybody, whether reasonably or unreasonably. We should argue and reason with them and carry them with us.

SRI M. KALYANASUNDARAM : ஸார், அமைச்சர் அவர்கள் அதிக நேரம் வேலை வாங்க வேண்டுமென்பது சர்க்காரின் நோக்கமல்ல, காலை நேரத்தில் ரொம்பவும் குளிர்ச்சியாக வேலை செய்ய வேண்டுமென்பது தான் நோக்கமென்று சொன்னார்கள். இப்போது காலை 10-30 மணிக்கு ஆரம்பம் என்று குறிப்பிடப்பட்டும் ஜில்லா கலெக்டர் ஆபீசிலும், மற்றும் தாலூகா ஆபீஸ்களிலும் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரையில் வேலை செய்து வருவது தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது உண்மையானால் மிகவும் சந்தோஷப்பட வேண்டியதே. ஆனால் இதைப்போல் ஒரு சிலர் வேலை செய்யலாம். இப்படி மனசாட்சிக்கு ஒத்து வேலை செய்வது வரவேற்க வேண்டியதே. ஆனால் சாதாரணமாக வேலை செய்யக்கூடியவர்களுக்குத் தான் இப்போது செய்யப்படும் ஏற்பாடுகள்.

SRI A. VEDARATHNAM : அரசாங்க அலுவலகங்களிலே இந்த நேரத்தை மாற்றுவதில் சிக்கல்கள் இருந்தபோதிலும், பள்ளிக்கூட நேரத்தை மாற்றுவதில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றித்தான் ஆலோசனை செய்யப்பட்டு, இப்போது நகரங்களிலே இருக்கக்கூடிய அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் காலை 9 மணிக்கு ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

Formation of road (Srirangampatti-Mathangudi road)

*1313 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the stage at which the acquisition of lands for the formation of a road from Srirangampatti village, Thennangudi vattam to Mathangudi to connect Pudukkottai-Thanjavur road, Kulathur and Alangudi taluks, stands?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of initiating Land Acquisition Proceedings does not arise in the case as the road has already been completed without acquisition of any lands.

SRI V. ARUNACHALA THEVAR : எந்த வருஷம் இந்தப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் ? இவ்வளவு காலதாமதம் ஆனதற்குக் காரணம், சர்க்காரிலே நிலத்தை ஆர்ஜிதம் செய்வதிலே உடனடியாக நடவடிக்கை

[22nd August 1961

எடுக்காதது காரணமா ? அப்படியானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தாமதம் எதனால் ஏற்பட்டது என்பதைப் பார்க்கும்போது, அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதிலே ஏற்படவில்லை. அங்குள்ள கட்சிப் பிரதிகட்சிகள் இடையே ஏற்பட்ட தகராறுதான் காரணம். போடப்போகும் பாதையை எந்த வழியாக ஏற்படுத்த வேண்டுமென்பதிலே சிக்கல் ஏற்பட்டதின் காரணமாகத்தான் அங்கு தாமதம் ஏற்பட்டது. இப்போது அங்கிருக்கக்கூடிய புறம்போக்கு வழியாக இந்த ரோடு ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கப்பட்டு இருக்கிறது.

Income-tax

* 1314 *Q.*—Sri D. S. AUTHIMOOLAM : Will the Hon. the Minister for Finance be pleased to state on what basis the Government of India allot grant from the income-tax collections from this State?

The Hon. Sri C. SUBRAMANIAM : A statement [a] is placed on the table of the House.

Sri A. A. RASHEED : From the statement placed on the table of the House, it is seen that 90 per cent of the allotment is based on population. Since the population of our State has gone down according to the recent census figures, may I know whether it will affect the allotment to our State?

The Hon. Sri. C. SUBRAMANIAM : This allotment is based on the previous census, i.e., 1951 census. 1961 census has just been completed. Now, the Finance Commission is just considering the whole basis of allocation. Therefore, I am unable to say anything about what is pending before the Finance Commission.

Sri M. KALYANASUNDARAM : நம்முடைய ராஜ்ய சர்க்கார் பைனன்ஸ் கமிஷன் முன்பு என்ன யோசனை கூறியிருக்கிறார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இன்னும் பைனன்ஸ் கமிஷன் வரவில்லை. அக்டோபரில் வர இருக்கிறது. அப்போது ஆலோசனை சொல்லப்படும்.

Sri S. M. ANNAMALAI : ஸார், மேஜைமீது வைத்திருக்கக் கூடிய அறிக்கையில் 1960–61-ல் இன்கம்-டாக்ஸ் குறைவாகவும், கிராண்ட்-இன்-எயிட் அதிகமாகவும் இருப்பதற்கான காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : படித்துப் பார்த்தால் தெரியும். இதிலே நமக்கு இன்கம்-டாக்சிலே ஒரு பகுதி பிரித்துக் கொடுக்கக் கூடிய தொகை சேர்க்கப்படவில்லை. அதைச் சரிக்கட்டுவதற்கு இந்த வருஷம் வரை கிராண்ட்-இன்-எயிடாக கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலை இல்லாமல் பைனன்ஸ் கமிஷன் மொத்தமாகவே ஒரு தொகை கொடுப்பதற்கு சிபார்சு செய்யலாம் அல்லது கிராண்ட்- இன்-எயிடாக ஒரு தொகை கொடுப்பதற்கும் சிபார்சு செய்யலாம். அதைப்பற்றி பைனன்ஸ் சமிஷன் இங்கு வரும்போது கேட்டுக் கொள்ளலாம். அவர்கள் அதன்படி செய்வதற்கும் இடம் இருக்கிறது.

---

[a] Printed as Appendix I on page 609 infra.